(இர்ரிகேஷன்) அவர்களிடமிருந்து வந்து விட்டதாகக் கருதி நான் கேள்விக்கு பதில் சொன்னேன். இன்வெஸ்டிகேஷன் இப்போது தான் முடிந்து இருக்கிறது. இனிமேல்தான் அதுகுறித்து செய்யப்போகிறோம் என்ற கருத்தை ஒட்டி 60 சதவிகித அடிப் படைப் பணிகள் முடிந்து விட்டதற்கான வாய்ப்பு இருக்கிறது என்ற எண்ணத்திலே சொல்லிவிட்டேனே தவிர, பெரிய தவறு ஒன்றும் நடந்துவிடவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

[முற்பகல் 11-10]

டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, தவறை தவ றாகச் சொல்லிவிட்டு, அதற்குத் திருத்தம் கொடுத்தார். ஆனால், இப்போது தவறே நடக்கவில்லை என்று சொல்கிறார். எதை நாங்கள் ஏற்றுக்கொள்ள ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, ஏதோ பெரிய தவறு நடந்துவிட்டதைப்போல பேராசிரியர் அவர் கள் தெரிவித்தார்கள். அப்படிப்பட்ட தவறு ஒன்றும் நடந்து விடவில்லை. ஏற்கெனவே பதில் சொல்லும்போது இன்வெஸ்டி கேஷன் நடந்து முடிந்துவிட்டது என்று சொன்னேன். இன் வெஸ்டிகேஷன் இன்னும் முடியவில்லை என்று தெரிய வந்ததால் அதற்குத் திருத்தம் கொடுக்கப்பட்டது. சீப் என்சினீயர் (இன் வெஸ்டிகேஷன்) அவர்களிடமிருந்து இன்வெஸ்டிகேஷன் முடிந்து ரிப்போர்ட் சீப் எஞ்சினீயர் (இரிகேஷன்)க்கு வந்துவிட்டது என்று நினைத்து முன்னால் பதில் சொன்னேன், ஆனால், ரிப்போர்ட் வரவில்லை என்பதால் இப்போது திருத்தம் கொடுக்கப்பட்டது. குற்றம், குறை இரண்டுக்கும் நிரம்ப வேறுபாடு உண்டு.

திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இந்த அவையின் நன்மைக்காக, சபாநாயகராகிய தாங்கள் அவர்களுடைய பதில் முழுவதையும் படித்துப் பார்த்து, அவையின் எதிர்கால நட வடிக்கைகளில் இப்படி ஏற்படாமலிருக்க வழிவகை செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முழுவதையும் படித்துப் பார்த்துவிட்டு, பின்னால் என்னுடைய தீர்ப்பை அறிவிக்கிறேன்.

## 6. கவன ஈர்ப்புகள்.

### (அ) திருவில்லிபுத்தூர் தாலுகா வத்திராயிருப்பு கிராம தீ விபத்து.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, "திரு வில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பில் 1981 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 2 ஆம் தேதி அன்று தீ பிடித்ததால் 207

1981 பிப்ரவரி 27] [திரு. இரா தாமரைக்கனி]

வீடுகளும், உடமைகளும் சேதம் அடைந்துள்ளதால், அப்பகுதி மக்களிடையே ஏற்படும் பதட்ட நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவரவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

**அறிக்கை.**

இராமநாதபுரம் மாவட்டம், திருவில்லிபுத்தூர் தாலுக்கா, வத்திராயிருப்பு கிராமத்திலுள்ள மேலபாளையம் தெருவில், 1981-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 1-ஆம் நாள் அன்று மாலை 5 மணியளவில் தீ விபத்து ஏற்பட்டது. 41 குடியிருப்புகள் பாதிக்கப்பட்டன. 34 குடியிருப்புகள் முழுவதுமாகவும், 7 குடியிருப்புகள் பகுதியாகவும் சேதமடைந்தன. மொத்த சேத மதிப்பு ரூபாய் 30 000. தீ விபத்து தற்செயலாய் ஏற்பட்டது. உயிர்ச்சேதமோ கால்நடைச் சேதமோ இல்லை. பாதிக்கப்பட்டவர்களுக்கு விபத்து நடந்த அன்று வத்திராயிருப்பிலுள்ள இந்து உயர்நிலைப்பள்ளியில் தங்க வசதி செய்து கொடுக்கப்பட்டு, உணவும் வழங்கப்பட்டது. முழுவதும் பாதிக்கப்பட்ட 34 குடியிருப்புகளுக்குத் தலா ரூபாய் 200-ம், பகுதியாகப் பாதிக்கப்பட்ட 7 குடியிருப்புக்களுக்குத் தலா ரூபாய் 50-ம் நிவாரணத் தொகையாக 1981-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 3-ஆம் நாள் அன்று வழங்கப்பட்டுள்ளது. மேலும், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அரிசியும், மண்ணெண்ணெயும் வழங்கப்பட்டது. வேட்டியும், புடவையும் வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

**திரு. இரா. தாமரைக்கனி :** தலைவரவர்களே, வத்திராயிருப்புப் பகுதியில் தீ பிடித்ததால் ஏழை எளிய மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற காரணத்தால் அவர்களுக்கு 2,000 ரூபாய் வரையில் தக்காவிக் கடன் கொடுக்க அரசு ஆவன செய்யுமா? 150 ரூபாய் வருமானம் உள்ளவர்கள் குடிசைகள் தீ பிடித்து சேதம் அடைந்தால்தான் இப்போது நிவாரணம் அளிக்கப்படுகிறது. அந்த வருமானத்தைப் பார்க்காமல் குடிசைகள் என்ற அடிப்படையில் நிவாரணம் அளிக்க ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவரவர்களே, அவர்களுடைய கேள்வியில் வருமான வரம்பை உயர்த்துவது பற்றி கேட்டிருக்கிறார்கள். அது இப்போது 150 ரூபாயிலிருந்து 200 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு கடன் கொடுக்க வேண்டுமென்று சொல்லும்போது அவர்கள் ஆதித்திராவிடர்களாக இருந்தால் 2,000 ரூபாய் வட்டி இல்லாத கடனாகக் கொடுக்கப்படுகிறது; மற்றவர்களுக்கு வட்டி உள்ள கடனாகக் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம்.

**திரு. இரா. தாமரைக்கனி :** * * *

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** * * *

**திரு. ப. பொன்னுரங்கம் :** சார், கால் அட்டன்ஷனில் ஸ்பெசிபிக்காக ஒரு இடத்தைப் பற்றி கேட்டு, அதற்கு பதில் சொன்ன பிறகு, மாநிலம் முழுவதிலும் நடைபெற்ற விபத்துக்களையும் அவைகளுக்கு அளிக்கப்பட்ட நஷ்ட ஈடுபற்றியும் கேட்கிறார் உறுப்பினர். அமைச்சரும் அதற்கு புள்ளிவிவரங்கள் அளிக்கிறார். இது நடைமுறைக்கு உகந்தது அல்ல. இதை நீங்கள் அனுமதித்தால் இது ஒரு முன் உதாரணமாக அமைந்துவிடும். எங்களுக்கும் இதைப்போன்று வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று நாங்கள் கேட்கும்போதும் நீங்கள் அனுமதிக்க வேண்டியிருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாநிலம் முழுவதும் பற்றி கேட்டிருப்பதால் நான் அதை அனுமதிக்கவில்லை. அவைக் குறிப்பிலிருந்து அதை நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

**(ஆ) மாயூரம் வட்டம் தேரெழுந்தூர் அரசினர் உயர்நிலைப் பள்ளிக் கட்டடம்.**

**திரு. இரெ. இராசமாணிக்கம் :** தலைவரவர்களே, ''மாயூரம் தாலுக்கா, தேரெழுந்தூரிலுள்ள அரசினர் உயர்நிலைப்பள்ளிக் கட்டடம் பாழடைந்து விழும் நிலையில் உள்ளதால் மாணவர் பெற்றோரிடையே நிலவும் கவலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

**அறிக்கை.**

மாயூரம் வட்டம் தேரெழுந்தூர் அரசினர் உயர்நிலைப்பள்ளியில் மூன்று கூரைக் கட்டிடங்கள் உள்ளன. அவற்றில் இரண்டின் கூரைகள் பழுதுபட்டன. ஒரு கூரைக் கட்டிடம் பழுது பார்க்கப் பட்டு புதிய கூரை வேயப்பட்டுள்ளது. மற்றொரு கூரைக் கட்டிடத்தில் ஒரு கூடத்தில் உத்தரம் ஒன்று பழுதுபட்டுள்ளது. உத்திரம் பழுதாகியுள்ள அறைகளில் வகுப்புகள் நடத்தப்படவில்லை. இக்கட்டிடத்தையும் பழுதுபார்க்க துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வரும் நிதி ஆண்டில் இப்பள்ளியின் அடிப்படை கட்டிட வசதிகள் குறித்து உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.